221154

2.50

# யாதும் ஊரே...

பிப்ரவரி-2000 | விலை: ரூ. 2.50 | இதழ்: 26

## நிர்மலா நீதி கேட்கிறாா்!




மக்கள் தொண்டன் ரவீந்திரன் (தர்மபுரி)

பாவாணரின்

## பிறந்த நாள் செய்தி



"ஆங்கிலர் நீங்கியதால் தமிழ்நாடு விடுதலை அடைய வில்லை. ஆரியம் நீங்குவதே உண்மையான தமிழர் விடுதலை யாம்."

7-2-190

நன்றி : 'முதன்மொழி'-இதழ் 15-2-1971

---

## போவோம் அங்கே பொழுது விடிய

முனைவர் தமிழப்பன்

போதுமடா வாழ்க்கை
புறப்படு போர்க்களம்
ஏதிலிகளாக
இருந்தது போதும்
ஈழப் போரில்
இறந்தால் என்ன
விடுதலைக்காக
இறந்து போவது
வீரமல்லவா
கோழையாக
வாழ்வது சிறப்பா

குண்டடி பட்டுச்
சாவது சிறப்பா
கொள்கைக்காக
உயிரைக் கொடுத்தல்
கொள்கைக்காக
உயிரை எடுத்தல்
இரண்டும் ஒன்றே
பின் ஏன் தயக்கம்
எழுந்து வா வா
போவோம் அங்கே
பொழுது விடிய

---



# யாதும் ஊரே...


பல்சுவைத் திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2030
தை மாதம் (10-2-2000)

"பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" – குறள்

ஆசிரியர் - வெளியிடுபவர்
நா. வை. சொக்கலிங்கம்

ஆண்டுக் கட்டணம் ரூ. 30
பத்தாண்டுக்கட்டணம் ரூ. 300
புரவலர் கட்டணம் ரூ. 1000
தனி இதழ் : ரூ. 2-50

தொடர்புக்கு :
"யாதும் ஊரே"
6, ஆநந்தன் தெரு,
திருவள்ளுவர் நகர், பம்மல்,
சென்னை-600075.


## குரங்கு கையில் பூமாலை!

இந்திய அரசியல் சட்டத்தை மாற்றியமைக்க மிகத் தீவிரமாக 2000ஜ.க. ஆட்சி செயல்படத் தொடங்கிவிட்டது. பா.ஜ.க.வின் நோக்கம் என்ன?

இந்தியா முழுமைக்கும் ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் மற்றும் மதச்சார்பின்மையை ஒழித்து இந்துத்துவா மதவெறியை நிலைநிறுத்துவது ஆகும். மாநில அமைப்பு முறைகளை மாற்றி ஒரே இந்தியா என்ற கோட்பாடுடன் செயல்படுவது அரசியல் நிலையற்ற தன்மை என்று சொல்லிக் கொண்டு பாராளுமன்ற மக்களாட்சி முறையை ஜனாதிபதி ஆட்சி முறையாகவோ அல்லது வேறு முறையாகவோ மாற்றுவது ஆகும். பா.ஜ.க.வினர் எப்போதும் மறைமுகத் திட்டத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள்.

சமூகநீதிச் சிந்தனைக்கு நேர் எதிரான கருத்தைக் கொண்டிருக்கும் பா.ஜ.க. வினரை அரசியல் சட்டத்தை மாற்ற அனுமதிப்பது, குரங்கு கையில் பூமாலையைக் கொடுப்பது போல் ஆகும்.

# வல்லினம்

கவிஞர் தணிகைச் செல்வன்

மில்லினியம் போட்டிருப்பது
முட்டைகள்தாம்;
மூன்று முட்டைகள்.

முட்டை துறந்து
சிறகு விரிந்து
குயில் பறந்து
கூவி வரப்போவது
அடுத்த மார்கழியில் தான்.
அப்போதுதான்
மூன்றாம் ஆயிரம்
முளைவிடும்
மேலைச் சீமைகளுக்கு

தமிழனுக்கோ—
சிந்துவெளிக்
கால் வழியில்
வந்த எம் மரபுக்கு
அது வெறும்
புத்தாயிரம் மட்டுமல்ல
பத்தாயிரம்! பத்தாயிரத்
தாண்டு!

ஆண்டின் மரபிலும்
மூத்தவன் நீ;
ஆண்ட மரபிலும்
மூத்தவன் நீ;

உனது
நெடும்பாதையின் தொடக்கம்
ஆரப்பா,
எதிரே நீளும் பாதை முடிவில்
யாரப்பா

குமரிக் கடலாலும்
தின்ன முடியாத மிச்சத்தை
கொடுங் கோலராலும்
தீண்ட முடியாத தேசத்தை

உயிர் வாழும் மொழிகளில்
மூத்த மொழியை
உயிருள்ள இனங்களில்
மூத்த இனத்தை

ஆயிரம் ஆண்டுகளாய்ப்
பிணித்துள்ள
ஆரியத் தளையும்
ஐம்பது ஆண்டுகளாய்
அடைத்துள்ள
ஆதிக்கச் சிறையும்
உடைபடும் போது

மில்லினியம் முட்டையில்
இருந்து
ஒரு வல்லினம் வெளிப்படும்
தமிழினம்.

221154



கொள்கைக் குன்று

# சிங்காரவேலர்

சிங். குணசேகரன்



தோற்றம் 18-2-1860

சொல் வேறு, செயல் வேறு என்றுள்ள தலைவர்களே இன்றைய நாளில் ஆளுயர மாலைகள் அணிவிக்கப்பட்டு விருதுகள் அளிக்கப்பட்டு பொது மக்களால் 'கைதட்டல்' கவிதைகளால் சிறப்பிக்கப்படுகிறார்கள், அல்லவா?

இவரைக் கும்பிட்டால், கூட்டத்தில் மாலை போட்டால், பேச்சுக்கு கைதட்டினால், எரிந்து விழுவார், கூச்ச விடுவார். இது என்ன, 'பூர்ஷ்வா மெண்டாலிட்டி' என்பார்.

ஆம். இவர்தான் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்.

புரட்சிக் கவிஞரால்—

''போர்க்குணம் மிகுந்த செயல் முன்னோடி
பொதுவுடைமைக்கு ஏகுக அவர் பின்னாடி''

என்று பாவிசைத்து பாராட்டப் பெற்றவர்.

மீனவ சமுதாயத்திலே பிறந்த போர்க்குணமுள்ளவர், பெரியபட்டினவ வகுப்பைச்சேர்ந்த சிங்காரவேலர், சின்னப் பட்டினவ வகுப்பைச் சேர்ந்த அங்கம்மாளை விரும்பினார். விட்டுவிடுவார்களா, பெரியவர்கள்.

இராயபுரத்திற்கு வடக்கேயுள்ள பழவேற்காடு உட்பட இருந்த மீனவர்களும் மீனவத் தலைவர்களும், தெற்கே

மாமல்லபுரம் வரையிலுள்ள மீனவர்களும், மீனவத் தலைவர்களும் இராயபுரம் கடற்பகுதியிலுள்ள மிகப் பெரிய தென்னந்தோப்பில் கூடினர். பஞ்சாயத்து நடந்தது.

சிங்கார வேலர் பெண்ணை வற்புறுத்தி மணக்கிறார் என்றும் பெண் விரும்பவில்லை என்றும் பேசப்பட்டது. ஆனால், இவையாவும் பொய்கள் என்று முடிந்த நிலையில 1889ல் இவர்கள் சாதி ஒழிப்பு திருமணம், காவலர்கள் துணையுடன் நடந்தேறியது.

இம்மட்டோ! தன் ஒரே மகள் கமலாவையும், கனக சபை என்ற சிறந்த விளையாட்டு வீரருக்கு சாதி ஒழிப்பு திருமணம் செய்வித்தார்.

பொதுவாழ்வில் போர் வீரராக இருந்த சிங்காரவேலர் அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் அங்கம்மாவுடன் உறுதியான அன்போடு உடன் வாழ்ந்தார். தம் நாற்பத்து நான்காம் வயதில் மறைவுற்ற அங்கம்மாளின் கல்லறையில்

அழசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் தவறாத பாவாய்—மடியின்றிப்
பின்தூங்கி முன்னெழும் பேதாய்ப் போதாய்ப்
என்கண் உறங்கும் இரா''

எனும் தனிப்பாடலைப் பதித்து அன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

1925ஆம் ஆண்டு சென்னை நகரசபைத் தேர்தலில் யானைக் கவுனிப் பகுதியில் போட்டியிட்டு வென்றார். அவர் சார்ந்த சாதியினர் இல்லாத பகுதியில் போட்டியிட்டும் வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலத்தில் பேசுவதைப் பெருமையாகக் கருதுகின்ற அக்காலத்தில் நகரமன்றக் கூட்டத்தில் தன் கன்னிப் பேச்சை 3,11-1925-ல் தமிழிலேயே பேசி, யாவரையும் வியக்கச் செய்தார்.

சுமார் 20 ஆயிரம் நூல்கள் கொண்ட அவர் நூலகத்தில் 9 ஆயிரம் நூல்கள் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்ட நூல்கள், அறிவு வெளிச்சத்தைத்தந்தன.



அன்றைய நகரசபைக் கூட்டத்தில்—கண்காட்சியில் நடக்கும் சூதாட்டம், மற்றும் குதிரைப் பந்தயம் குறித்து அவை ஒழிக்கப்பட வேண்டும் என்று தீர்மானங்கள் கொண்டு வந்துள்ளார்.

இன்றைய தினம் அரசியலே சூதாட்டக்களமாகிவிட்ட நிலையில், இத் தீமைகள் பற்றி பேச முன் வருவார் எவருமில்லை!

பொதுவுடைமைவாதி என்பதை பெருமையுடன் கொண்டிருந்த, சிங்காரவேலர், 'மாஸ்கோ ராஸ்கல்' என்று ஏளனம் செய்ததையும் ஏற்றுக்கொண்டார்.

குத்தூசி குருசாமியின் மகளுக்கு 'ரஷ்யா' என்று பெயர் சூட்டியுள்ளார். இன்றைய தமிழ் இளைஞர்களின் தளபதியாக விளங்கும் சுப வீரபாண்டியன் அவர்கள் தந்தையாரின் காரைக்குடி இல்லத்திற்கு 'சமதர்ம விலாஸ்' எனப் பெயரிட்டுள்ளார்.

இன்று நம்மிடையே வாழும் கவிஞர் பெருந்தகை சுரதா அவர்கள்—'சிங்கார வேலரின் கொள்கையை ஏற்காமல் புறக்கணிப்பது, சந்தனத்தைப் புறக்கணித்து மரத்தாளை-தக்கைகளை ஏற்பது 'போன்றது' எனக் கூறி சிங்காரவேலருக்கு மலர்வெளியிட்டுச் சிறப்புச் செய்தார்.

நான் பிராமணன் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது நான் மனிதனே என்று உறுதியுடன் பூனூலை அறுத்தெறிந்த, தோழர் ஏ.எஸ்.கே. (அய்யங்கார்) அவர்கள், சிங்காரவேலரின் மடியில்தான் பாரதியார் உயிர் நீத்தார் எனக் கூறியுள்ளார்.

இவருக்குக் கதரின் மீது கொள்கையளவில் மாறுபாடான கருத்திருந்த போதும், தம் வாழ்நாள் முழுமை

யும் கதராடையே அணிந்திருந்தார். வீட்டினருக்கும் கதராடையே வாங்கித் தருவாராம்.

சிங்காரவேலர் தன்னையோ, தன் சமூகத்தினரையோ இழிவாகப் பேச அனுமதித்ததில்லை.

சர்.சி.பி. இராமசாமி (அய்யர்) சென்னை உயர்நீதி மன்றத்தில் அரசு வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த வேளையில் சிங்காரவேலரை நீதிமன்ற வளாகத்தில் பெயரைச் சொல்லியும், ஒருமை விளியிலும் அழைத்து வந்தார். சர்.சி.பி. இராமசாமி (அய்யர்) சிங்காரவேலருக்கு இளையவரே!

நட்பின் அடிப்படையில் அல்லாது சிங்காரவேலரினும் உயர்ந்தவர் எனும் அக்கிரகார அகங்காரத்தினால் மட்டுமே இப்படி நடந்து வந்தார்.

தன்மானமுள்ள, பொதுவுடைமைச் சிங்கத்தினால் இதைப்பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

ஒருநாள் சி.பி. இராமசாமி (அய்யர்) இல்லத்தில், ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிங்காரவேலர் அங்கே தமக்கு நெருக்கமானவர்களோடு சென்று, பலர் முன்னிலையில் அவரை 'அடே இராமசாமி! இங்கே வாடா' என நட்புமுறையில் அழைப்பது போல் அழைத்தார்.

என்ன செய்யும், அந்தப் பார்ப்பனப் பாம்பு! பெட்டிப் பாம்பாக அடங்கியது. தான், இதற்கு முன்னர் நடந்து கொண்ட தன்மைக்கு, சிங்காரவேலரிடம் வேறுவழியின்றி வருத்தம் தெரிவித்தார், சர்.சி.பி. இராமசாமி (அய்யர்) அவர்கள்.

பொருளாதார ஏற்றத் தாழ்வை சமப்படுத்த சுரண்டலை ஒழிக்க பாசறையாக உள்ளது, தொழிற்சங்கம் இங்கே கடவுளுக்கு வேலை உண்டா?



ஒருமுறை தொழிற்சங்கக் கூட்டத்தில் கடவுள் வாழ்த்துப்பாடிய இந்தியத் தொழிற்சங்க முன்னோடியான சக்கரை (செட்டியாரை)ச் சட்டையைப் பிடித்து இழுத்துப் 'பொதுவுடைமை இயக்கச் சார்பான தொழிற்சங்கக் கூட்டத்திற்கும் கடவுள் வாழ்த்துப் பாட்டுக்கும் என்ன சம்பந்தம்'' என அதட்டி கூட்டத்தை விட்டு வெளியேற்றி உள்ளார், சிங்காரவேலர்.

சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர், இந்தியப் பொதுவுடைமைத் தந்தையாகப் போற்றப்படுபவர், புத்தநெறியை மேற்கொண்டவர், தொழிற்சங்க முன்னோடி, நாத்திகர், பொதுவுடைமையும் பொதுவுரிமையும் வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் போராடியவராவார்.

1946ல் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார். எண்பத்தாறு வயதிலும்-இவருடைய கண்ணிமைகள் செயலிழந்த நிலையில் பார்க்க, படிக்க இயலவில்லை. இந்நிலையிலும் இவர்தம் கைகளால் இமைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சோர்விலாது படித்தார் என்று அறிகிறோம்.

''புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவா''— என்னும் மொழி சிங்கார வேலருக்குப் பிடித்தமானதாகும். பொதுவுடைமை, பொதுவுரிமை உடைய மனிதநேய சமூகத்தை அவர் வழியில் உருவாக்குவோம்!

---

## ஆங்கில ஆதிக்க ஒழிப்பு, தமிழ் உரிமைக் காப்பு மாநாடு

மொழிப்போர் நினைவுநாள் 25-1-2000 அன்று தமிழக மாணவர் முன்னணி சார்பில் மாநாடு தியாகராயர் நகரில் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு ந. இராகவராசவேலு (கிறித்துவக் கல்லூரி) அவர்கள் தலைமை தாங்கினார். பாரதிபிரபு குழுவினரின் நற்றமிழ் நாடகம் நடைபெற்றது.

# நாவலர் இறுதி உரை

''இன்றைக்கு மின்சாரவிளக்கைப் பயன்படுத்துகிறான். காரைப் பயன்படுத்துகிறான். ஆனால், கடவுள் சன்னதியிடம் மட்டும் தீவட்டி எடுத்துக் கொண்டு போகின்றான். அங்கே மட்டும் எதற்கு தீவட்டி? அது காட்டு மிராண்டி கண்டுபிடித்தது.

தந்தை பெரியார் ஒருமுறை சொன்னார். ஒருவன் செத்தவுடன் பிணத்தை சுமந்து கொண்டு செல்கின்றார் எதற்குக் கூட செல்கின்றவன் நெருப்புச் சட்டியை எடுத்துக் கொண்டு போகின்றான்?

தீயை உண்டாக்க முடியாத காலத்தில் சுடுகாட்டில் நெருப்பு கிடைக்காது என்கிற காரணத்தினாலே வீட்டிலே இருந்து நெருப்பை சட்டியில் வைத்து தூக்கிக் கொண்டு போனான்.

தந்தை பெரியார் கேட்டார், ''இப்பொழுது எதற்கு நெருப்பைத் தூக்கிக் கொண்டு போகிறாய்?'' என்று கேட்டார்.

ஒரிசாவிலே வெள்ளம் வந்து பதினோராயிரம் பேர் செத்துப் போனார்கள் அவர்கள் அத்துணை பேருமா நாத்திகர்கள்? அவனவன் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு பிரார்த்தனை செய்யாமலா இருந்தான்?

இதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் சொன்னார். மனிதனுக்குப் பக்தியைவிட புத்தியே முக்கியம் என்று சொன்னார்.

ஒலி பெருக்கியை ஆண்டவனா உண்டாக்கினான்? காரை ஆண்டவனா உண்டாக்கினான்? விமானத்தை ஆண்டவனா உண்டாக்கினான்? நாம் பார்க்கின்ற அத்துணை பொருளும் மனிதனுடைய அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி தன்மையினுடைய விளைவாக வந்ததே தவிர, :000 ஆண்டுகளுக்கு முன்னால் ஏன் ஒலிபெருக்கி கண்டு பிடிக்க முடியவில்லை?



இன்றைக்கு எவ்வளவோ ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. ஏ.கே. 47 என்ற துப்பாக்கியை வைத்துதான் விமானத்தையே கடத்தியிருக்கின்றான். விமானங்களையும் கடத்துவதற்குக் கூட இரண்டு ஆயுதங்கள் பயன்படுத் தப்பட்டிருக்கின்றன.

இன்னமும் நமது பரமசிவன் கடவுள் 'சூலம்' தானே வைத்திருக்கின்றான். ஏ,கே. 47 வந்து விட்டது. போபர்ஸ் பீரங்கி எல்லாம் வந்துவிட்டது. அணு குண்டு எல்லாம் வந்துவிட்டது. ஒரு கண்டத்திலிருந்து இன்னொரு கண்டத்திற்கு ஏவுகணைகளை விடுகின்றான்.

இவ்வாறு குண்டுகள் வந்ததற்குப் பிறகும் கடவுள் கைகளில் சூலாயுதமும் வேலாயுதமும் தானே இருக்கின்றது. கடவுள் சக்ர ஆயுதத்தை இன்னும் வைத்துக் கொண்டிருக்கின்றான். காட்டுமிராண்டிக் காலத்திலே மனிதன் கண்டுபிடித்து கடவுள் கைகளில் கொடுத்த ஆயுதங்கள் இவை. அதற்கும் பிறகு 'கடவுள்கள்' திருந்தவே இல்லை.''

பொதுவாழ்வில் தூய்மை, எளிமை. நேர்மையாகவும் நாத்திகராகவும் வாழ்ந்த டாக்டர் நாவலரின் இறுதி உரை (31-12-1999) பெரியார் புத்தாயிரம் ஆண்டு விழா!

---

சென்னையில்

## சமூகநீதி எழுச்சி மாநாடு

2000 மார்ச் 5 ஞாயிறு காலை 9 மணி முதல் இரவு 9 வரை

அழைப்பு : தமிழ் தமிழர் இயக்கம்

---

எச்சரிக்கை

# 'சாகா' - உடற்பயிற்சி?

இந்தியாவில் இப்போது இரண்டு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒன்று உலகமயமாக்குதல். இரண்டு-மதவாதம் பத்து வருடங்களுக்கு முன் ஒரு சாதாரணமான விஷயமாக இருந்தது. ஆனால், இப்போழுது அரசியலிலும் சமூகத்திலும் முக்கிய அங்கம் வகிக்கிறது இந்த மாற்றத்தில் இளைஞர்கள் கட்டுப்பட்டு வருகிறார்கள். பாசிச சக்திகள் சனநாயகத்தில் எப்படி இடம் பிடித்ததோ அதே வழியில் மதவாதமும் இடம்பிடித்து விட்டது. ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்து மதவாதம் கல்வி திட்டத்தில் தங்களது கொள்கைகளை புகுத்திடத் திட்டமிட்டுச் செயல்படுகிறது.

கல்வி நிலையங்களில் 'சாகா' என்கிற காக்கிச் சட்டை உடற்பயிற்சி நடத்தி உடல் ஆரோக்கியத்திற்கு வழிகாட்டுவது போல போர்க் குணத்தை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகிறார்கள். இருபதாயிரம் பள்ளிகளில் இதனை இவர்கள் செயல்படுத்திட திட்டமிட்டுள்ளனர்.

கல்வி மையங்கள் அனைத்தினையும் காவி மயமாக்கிட மனித வள மேம்பாட்டுத்துறை மூலமாக தீவிரமாக முயற்சி நடைபெறுகிறது. பாடத் திட்டங்களில் குறிப்பாக பள்ளிப் பாடப் புத்தகங்களில் வரலாற்றினை மாற்றுவது அவர்களின் திட்டங்களில் ஒன்றாகும்.

'ஆர்கனைசர்' என்ற ஆர்.எஸ்.எஸின் ஏடு, அமெரிக்கா இந்து நாடாக இருந்தது என்றும் அதனை கிருத்துவர்கள் கிருத்துவ நாடக மாற்றி விட்டனர் என்றும் கூறியுள்ளது.

மதவாதத்தை ஒழிக்காமல் சனநாயகமோ, சோசலிசமோ தழைக்காது. 21-ம் நூற்றாண்டு சோசலிச நூற்றாண்டாக இருக்க வேண்டும்.

பேரா. கே. என். பணிக்கர்,
அகில இந்திய சனநாயக வாலிபர் சங்க மாநாடு 10-1-2000



# மீண்டும் தடா!

எஸ். வி. இராசதுரை

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டி இந்திய தேசியவாதிகள் எதிர்த்து போராடுவதை மூர்க்கத்தனமாக ஒடுக்குவதற்காக-அன்றைய பிரிட்டிஸ் அரசாங்கம் கொண்டு வந்த 'ரௌலட் சட்டம்'-மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது.

ஆனால் பஞ்சாப் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக ராசீவ் காந்தி அவர்களால் 1985ல் கொண்டு வரப்பட்ட சட்டம் 1987-ல் 'தடா' சட்டமாகியது. இந்தியா மற்றும் சர்வதேச அளவில் எதிர்ப்பு எழவும், 1996 ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டும் நரசிம்மராவ் அரசு, தடா சட்டம் மேலும் நீடிக்காமல் காலவழக்கொழிய அனுமதித்தது.

என்றாலும்-குற்றவியல் சட்டத் திருத்த மசோதா-1995 என்ற சட்டத்தை 18-5-95 அன்று கொண்டு வந்தது. பயங்கரவாதிகள், தேச விரோத சக்திகள் ஆகியோர்மீதுமட்டுமே இப்புதிய சட்டம் பயன்படுத்தப்படும் என்றார், பிரதமர் நரசிம்மராவ்.

தமிழ்நாட்டில் 'பொடா' சட்டம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மக்களின் எதிர்ப்புக் குரலால் அன்று முடக்கப்பட்ட சட்டத்தின்-மறு பதிப்பாக -''மனித முகமுள்ள தடா'' (அத்வானியின் கருத்துப்படி) மீண்டும் அமல்படுத்தப்பட பா.ஜ.க. அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரால் கொண்டு வரப்படும் இச்சட்டம், 'தடா'வைப் போலவே, மக்களின்

உரிமைகளுக்காகப் போராடுபவர்கள், தொழிற்சங்க வாதிகள், தலித்துகள், எதிர்க்கட்சியினர், சிறுபான்மையினர் ஆகியோர் மீதும் பாயும் என்பது திண்ணம்.

மனித உரிமை அளவுகோள்கள் அனைத்தையும் மீறுகின்ற இப்புதிய 'தடா' சட்டம் நிறைவேறாதபடி தடுக்கப்பட வேண்டும்.

தொடர்புக்கு: 'புதிய தடா' எதிர்ப்புக் கூட்டமைப்பு, மே/பா-பி-யு.சி.எல்., (தமிழ்நாடு, புதுவை) இரண்டாம் மாடி-32, கச்சாலீசுவரர் கோயில் தெரு, சென்னை-1.

நன்றி: 'நந்தன்' இதழ்

---

## முதியோர் இல்லம்

திருக்குறள் செல்வர் அ.ம. வேணுகோபாலன் அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டு பெங்களூர் பெனரகட்டா சாலையில் செயல்பட்டுவரும் ஆனந்தாச்சுரம முதியோர் இல்லம் ஆதரவற்ற முதியோர்களுக்குத் தொண்டாற்றி வருகிறது. இந்த இல்லத்திற்கு உதவி செய்ய வேண்டுவோர் :

''ஆனந்தாச்சிரம முதியோர் இல்லம்''
எண் 53/6, பெனாகட்டா நெடுஞ்சாலை,
பெங்களூர்-560029.

எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டப்படுகிறார்கள்.

---

போரிலே கூட புற ஆற்றலினும் மன ஆற்றல்
மூன்று மடங்காகும்.

நெப்போலியன்



சிற்றிதழ்கள் பாதையில்

# தடைக்கற்கள்

18 வயது நிரம்பினால் இந்நாட்டில் ''ஒருவனை முழுக் குடிமகனாக ஏற்றுக் கொள்கிறார்கள். அவனுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை தானே வந்து விடுகின்றது. ஆனால் 18வது அகவையில் அடியெடுத்து வைக்கும் 'எழுகதிர்'-இதழ் இதுவரை நூலகங்களில் இடம் பெறச் செய்யப்படவில்லை. ஒரு காசளவேனும் அரசு விளம்பரங்கள், ஏன்; எந்த விளம்பரமுமே எழுகதிருக்குக் கிட்டியதில்லை. பல நாடுகளில் ஒரு ஏடு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் வெளி வந்தால் போதும். அவ்விதழை நூலகங்களில் இடம் பெறச் செய்யவும், அவர்கள் விண்ணப்பிக்கக் கூடத் தேவையில்லை. தாமாகவே அனுமதி கிடைத்து விடும்.

ஆனால் உலகத்திலேயே மாபெரும் சனநாயகநாடு என்று புகழப்பெறும் இந்தியாவிலோ எத்தனை ஆண்டுகள் இடைவிடாமல் வெளிவந்தாலும் இலட்சிய ஏடுகள் கண்டு கொள்ளப்படுவதே இல்லை. அந்த நேரத்தில் சில ஏடுகள் ஆரம்பிக்கிறபோதே பக்கத்துப் பக்கம் அரசு விளம்பரங்களோடும் அனைத்துவிதச் சலுகைகளோடும் பவனி வருகின்றன.''

'எழுகதிர்'-இதழ்- முனைவர் அருகோ

# அஞ்சல் கட்டணச் சலுகை ரத்து

திருச்சியிலிருந்து கடந்த ஐம்பது ஆண்டு காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் வார இதழ், 'மறுமலர்ச்சி' ஆகும். மற்றொரு இதழ் 'நர்கிஸ்'.

மேற்கண்ட இரு இதழ்களுக்கும் அஞ்சல் கட்டணச் சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரசு விளம்பரங்கள், நூலகங்களில் இடம் பெறுவது, அஞ்சல் கட்டணச் சலுகை முதலானவைகள் பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகள் களைய-தமிழகச் சிற்றிதழ் சங்க நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

குடியரசுத் தலைவரின்

# எச்சரிக்கை !

"நமது ஜனநாயகம் என்பது சாணிக் குவியலின் மீது கட்டப்பட்ட அரண்மனையாக மாறாமல் இருக்க சமூக, பொருளாதார அரசியல் ரீதியாகப் பின்தங்கிய மக்களுக்கு சமூகநீதி வழங்க இடஒதுக்கீடு அவசியம்.

இதற்கான சட்டங்களுக்கும், விதிகளுக்கும் புதிய விளக்கங்களை அளித்துக் கொண்டு, இட ஒதுக்கீட்டின் பலன்கள் உரியவர்களுக்கு கிடைக்காமல் தடுக்கும் எதிர்ப் புரட்சிப் போக்கு காணப்படுகிறது. இது மகளிர், தலித் துக்கள் இதர நலிவுற்ற பிரிவினர் ஆகியோரின் நலன் களுக்கு எதிரானது.

சமூகத்தில் ஏற்படக்கூடிய பதற்றங்களைப் பயன் படுத்தி ரத்த ருசிப்பார்க்க, வன்முறை தனது நாக்குகளைத் தொங்கவிட்டுக் காத்துக் கொண்டிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் கோடிக்கணக் கான மக்களிடம் இன்னமும் சேரவில்லை. பிராந்திய ரீம்யாகவும் சமூக ரீதியாகவும் ஏற்றத் தாழ்வுகள் மலிந்து கிடக்கின்றன.

உலகில் தொழில்நுட்பம் படித்தவர்கள் அதிகம் உள்ள வர்கள் நம்நாட்டில்தான்; கல்வியறிவே இல்லாதவர்கள் அதிகமிருப்பதும் நம்நாட்டில்தான். வறுமைக்கோட்டுக்குக் கீழே வசிப்பவர்கள் அதிகம் இருப்பதும் நம் நாட்டில்தான். ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகள் அதிகம் இருக்கும் நாடும் இந்தியாதான்.

ஏழைகள் குடியிருக்கும் சேரிகளுக்கு நடுவில், கோடீஸ் வரர்களின் நகர்கள் முளைக்கின்றன. நமது சமூகத்தின் ஒரு பகுதியினர் சாதாரண தாகத்துக்கூட பாட்டிலில்



அடைக்கப்பட்ட உயர்ரக குளிர் பானத்தை உறிஞ்சிக் குடிக் கிறார்கள். சமூகத்தின் மற்றொரு பகுதியோ மணலும், பாசியும் கலந்த அசுத்த நீரை மொண்டுக் குடிக்கிறது.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். இவர்கள் நீண்ட காலமாகவே சாதுவாக இருக்கிறார்கள் என்பதைச் சமூகம் மறந்து அலட்சியப் படுத்தக்கூடாது.

பெரிய அணைத்திட்டம் என்ற பெயரில் காடுகளை அழித்து, சுற்றுச் சூழலை நாசப்படுத்தி பாரம்பரியமாக வசித்த இடங்களிலிருந்து மலைவாழ் மக்களையும், பழங் குடியினரையும் நிர்க்கதியாக வெளியேற்றிவிடக்கூடாது"

குடியரசு நாள் உரை

அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டும் நெறிகளை வகுத்துத் தந்துள்ளார். தடம்பற்றிச் செல்வார்களா?

---

# புதிய குமுகாயம் புலர்க!

## கொடுமுடி கவிஞர் க.அ. பிரகாசம்

அயல்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டோரெல்லாம்
அவரவர்தம் மொழிபெரிதாய்ப் போற்றும் போது

மயிரென்று தமதன்னை மொழியை நீக்கி
மடையனிலும் மடையனாய்க் கடைய னாக

அயலானின் அடிவருடியாகக் கீழ்மை
அவிசாரி பிள்ளையெனத் திரிவான் . ச்சீ!

தயங்காமல் இந்தஇனம் அழிந்து தூர்ந்து
தளிர்க்கட்டும் புதியதமிழக் குமுகம் தானே!



# வேண்டாம், 'அய்யன்'

**இங்கர்சால்**

தமிழக முதல்வர் கலைஞர் திருவள்ளுவரை அய்யன் என்று அழைப்பேன்-அழைப்போம் என்கிறார்.

அய்யன் என்ற தமிழ்ச் சொல்லுக்கு அரசன், அருகன், அழகுடையவன், கடவுள், சிவன், உபாத்தியாயன், உயர்ந்தோன், அய்யனார், குரு, சார்த்தன், தந்தை, மூத்தோன் முனிவன், ஆசான், பார்ப்பான், சுமார்த்த பிராமணன், எசமானன், பிதா, அய்யர், ஆரியன்—இப்படியாக பொருள் சொல்லப்படுகிறது.

வள்ளுவருக்கு ஏற்கனவே 'திரு' அடைமொழி கொடுக்கப்பட்டு திருவள்ளுவர் ஆனார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் 'உருவம்' பதிவு செய்யும் அளவிற்கு அறிவியல் அன்று வளர்ந்திருக்கவில்லை.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என்ற வள்ளுவருக்கு இல்லறம் நடத்தியப் பெருந்தகைக்கு தாடி நீட்டி, தலைமுடி வளர்த்து உருவம் கற்பித்தனர்.

இஸ்லாமியரின் இறைவனுக்கு உருவம் கற்பிக்கப்படவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முரண்பட்ட உருவ அமைப்பிற்கு பெண்மையின் நளினத்தையும் கலைஞர் கற்பித்துள்ளார். மேலும் அய்யன் என்றும் அறிவித்தும் செயல்பட்டு வருகிறார்.

'கடவுள் இல்லை' என்பதிலிருந்து மாறுபட்டு 'ஒருவனே தேவன்' என்று முழங்கியதன் மூலம் எதையும் வழிபடலாம் என்பதுடன் மூடநம்பிக்கைகளின் மொத்த உருவமாக கழகத்தவரை மாற்றிவிட்டார்கள். பார்ப்பன

ரும் தமிழரே என்று 'பல்டி' அடித்து செயலவிதாவை திராவிட இயக்கத்து முதல்வராகும் வாய்ப்புக்கு வழி செய்துவிட்டார்கள். அறிவுக்கு எதிரி ஆலயம் அல்லவா? ஆனால் 'அறிவாலயம்' கட்டி, அறிவை புதைத்துவிடு என்று அறிவித்தாகிவிட்டது.

இந்நிலையில் 'அய்யன்' என்று அறிவித்து, வள்ளுவரை தமிழரல்லர் என்ற நிலைக்கு தள்ளவேண்டாம். கலைஞரே! குறள்நெறி பேணுவோம்!

---

தமிழகத்தின்

# சொத்து விபரம்?

### சிங்.குணசேகரன்

இந்தியாவிலேயே இலஞ்சம் வாங்காத அமைச்சர்களைக் கொண்ட ஒரே மாநிலம் கேரளம் மட்டும் தான். காரணம் லஞ்சம் வாங்கியதாக அறிந்தால் 24 மணி நேரத்தில் வெளியேற்றப் படுவார்கள்.

கேரள முதல்வர் நாயனார் (8-1-2000)

முன்னாள் முதல்வர், அமைச்சர், எம்.எல்.ஏ., ஐ.ஏ.எஸ். அதிகாரி போன்றவர்கள் மீது வழக்கு போட்டு, சட்டத்தின் மூலம் நீதியை நிலை நாட்டிவரும் தமிழக முதல்வர் கலைஞரைப் பாராட்டுகிறோம்.

எதிர்க்கட்சியினர் ஊழல்வாதிகள் என்பது சரியாகட்டும். ஆனால்-தி.மு.க.வினர் நிலை என்ன?

தமிழக முதல்வர், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சொத்து விபரங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவது எப்போது?

கலைஞர் தன் சொத்துக்களையும், தன் குடும்பத்தினர் சொத்துக்களையும் அறிவித்து மற்றவர்களுக்கு வழிகாட்டுவாரா? சந்தேகத்திற்கு இடமளிக்க வேண்டாம்?



# விழா

6-1-2000 அன்று தாம்பரம் பேருந்து நிலையம் அருகில் மகளிர் உரிமை மற்றும் மேம்பாட்டு மையம் சார்பில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாவது குறித்து கண்டித்து ஒருநாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் திரு. எம். சியாமளா பேபி தலைமையில் நடைபெற்றது.

11-1-2000 தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சென்னை பாரிமுனையில் மனிதச் சங்கிலீப் போராட்டம் பழ. நெடுமாறன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் பேருந்து நிலையம் அருகில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்திற்கு ச. யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

15-1-2000 தாம்பரம் பலராம் தெருவில் பொங்கல் தைத்திருநாள், தமிழ்ப் புத்தாண்டு நிகழ்ச்சி அன்னைத் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்றது. 'எழுகதிர்' அரு. கோ சிறப்புரையாற்றினார்.

16-1-2000 பல்லாவரம் திருக்குறள் இளைஞர் மன்றம் சார்பில் பொங்கல் மற்றும் புத்தாண்டு விழாவில் பேரா. இன்குலாப்; தொழில் அதிபர் மா. மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் இஸ்லாமிய மகளிர் பொங்கலிட்டு, உண்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

16-1-2000 பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'தமிழ் நிலம்' ஏடு மீண்டும் சனவரி மாத முதல் வெளிவரத் தொடங்கிவிட்டது. உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் குரலாக தாமரை பெருஞ்சித்திரனார் அவர்களை ஆசிரியராகக் கொண்டுள்ளது. தமிழ்நிலம்-நல்ல தமிழ் உணர்வாளர்களை உருவாக்கட்டும்!

18-1-2000 காஞ்சிபுரம் இரட்டை மண்டபத்தில், தமிழ்

கலை இலக்கியப் பேரவை, தமிழக மாணவர் முன்னணி, தமிழக இளைஞர் முன்னணி ஆகிய தமிழ் அமைப்புகள் தமிழர் திருநாளை பல நிகழ்ச்சிகளோடு சிறப்பாகக் கொண்டாடின.

23-1-2000 குறளன்பன் ஆ.வே. இராமசாமி அவர்களுக்குப் பாராட்டும், திருவள்ளுவர் திருநாளும் வைரிசெட்டிப் பாளையம் திருக்குறள் பேரணி சார்பில் நடைபெற்றது.

29-1-2000 தமிழ் வளர்ச்சிப் பேரவை சார்பில் சர். தியாகராயர் கல்லூரியில் ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் நூற்றாண்டு விழா முனைவர் பொற்கோ தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

## கிராமப்புற ஏழ்மை

1990ல் பொருளாதார தாராளமயமாக்கல் அமல் செய்த பின் ஏற்பட்டுள்ள மாறுதல் என்ன?

1991 முதல் 1997 வரை கிராமப்புற ஏழ்மை அதிகரித்துள்ளது. கிராமங்களில் வறுமைகள் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களின் சதவீதம் 39.04லிருந்து 38.6 ஆக உயர்ந்துள்ளது. ஆனால், நகர்ப்புற வறுமையாளர்களின் எண்ணிக்கை 35.20%லிருந்து 33.97 ஆக குறைந்திருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி விகிதம், மக்கள் தொகைப் பெருக்க விகிதத்துக்கும் கீழ் முதல் முறையாக சரிந்துள்ளது. வேளாண் துறைக்கான முதலீடு குறிப்பாக அரசுத் துறை முதலீடு குறைந்து கொண்டு வருகிறது. தொழில் துறையில் காட்டப்பட்ட முனைப்பு வேளாண் துறையில் காட்டவில்லை.

மக்கள் தொகையில் 70% உள்ள கிராமப்புற மக்களுக்குப் பயனில்லை எனில் சீர்திருத்தம் என்பது வெற்றுப் பேச்சே!

ஏழை, எளியவர்களை உயர்த்துவதே, மக்களாட்சி!

தகவல் : அ.சி. சின்னப்பாத் தமிழர்



## புகழ்ச்சியை நிறுத்துங்கள்!

கவிஞர் ம.அ. சந்திரன்
தாசேக்குளுகோர் மலேசியா

சொந்தத் தாய்மொழி நாளிதழ் வாங்கித்
தமிழை வளர்க்கும் எண்ணமில்லை—பண்புச்
சரிவைத் தடுக்கும் முயற்சியில்லை—நாங்கள்
வந்த குலமோ மறவர் குலமென
சங்கம் வைப்பதில் குறைச்சலில்லை—சாதி
சழக்கைக் காப்பதில் குறைச்சலில்லை...!

பாரதி தாசன் பாடலில் ஒன்றைப்
பாடித் துணியும் திறனில்லை-தமிழ்ப்
பகையை நொறுக்க எழுச்சியில்லை—நாங்கள்
சேரன் பரம்பரை என்று கத்தித்
தாண்டிக் குதிப்பதில் குறைச்சலில்லை—வீணாய்ச்
சலசலப்பதிலே குறைச்சலில்லை ..!

சொந்த மக்களைத் தாய்மொழிப் பள்ளியில்
சேர்க்கும் துடிப்புச் சிறிதுமில்லை!—அந்தச்
சீனனைப் பார்த்தும் அறிவில்லை!—சோழன்
எந்தன் வம்சம் என்று மாநாடு
எடுத்துக் கதைப்பதில் குறைச்சலில்லை—சும்மா
எகிறிக் குரைப்பதில் குறைச்சலில்லை...!

ஆண்டப் பரம்பரை மீண்டும் ஆள
ஆசை கொள்ளுது; ஈழத்திலே—அதுக்கு
ஆதர வளிக்கும் நினைப்பில்லே—அந்தப்
பாண்டியன் எங்கள் வழித்தோன்றல் என்று
பேசித் திரிவதில் குறைச்சலில்லை— இனத்தைப்
பிளவுப் படுத்தலில் குறைச்சலில்லை...!

இனத்தின் உணர்வை மொழியின் உணர்வை
இரண்டு விழியாய்க் கொண்டவர்கள்—வீரத்தை
இதயமாகக் கொண்டவர்கள்—ஈழ
இனத்தார்! அவர்கள் மரபினர் என்றினி
விளம்பித் தலையை நிமிர்த்துங்கள்
வேந்தர் புகழ்ச்சியை நிறுத்துங்கள்...!

நன்றி: 'அருவி' இதழ் மலேசியா

---



# கட்டுரைப் போட்டி

தலைப்பு:

"பயிற்று மொழியிலிருந்து ஆங்கிலத்தை அகற்றினால் இந்தி புகுந்து விடாது"

விதிமுறைகள் :

1. 'யாதும் ஊரே' இதழின் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.
2. கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10-3-2000.
3. தேர்ந்தெடுக்கப்படும் மூன்று கட்டுரைகள் ஒவ்வொன்றும் ரூ. 500 பரிசு பெறும். அக் கட்டுரைகள் இதழில் பிரசுரிக்கப்படும்.
4. ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.

ஆசிரியர் : 'யாதும் ஊரே'-இதழ்



உயிர் பறிக்கும், துறக்கும்

# (அப்)பாவித் தொண்டர்கள்!

தமிழகத்தில் இரண்டு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கன.

முதலாவது முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான், முன்னாள் எம்.எல்.ஏ. மல்லிகா ஆகியோரைத் தொடர்ந்து முன்னாள் முதல்வர் செயலலிதா, முன்னாள் அமைச்சர் செல்வ கணபதி, ஐ.ஏ.எஸ். அதிகாரி எச்-எம். பாண்டே முதலானவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை அளித்துள்ளது.

இதன் எதிரொலியாக கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேருந்தில் கழகத் தொண்டர்கள் 'தீ' வைத்ததினால் மாணவிகள் மூன்று பேர் கருகிச்செத்தனர். இது 'வெறிச் செயல்' அல்லவா?

இரண்டாவது- எம்.பி. யாகும் வாய்ப்பு தனக்கு கொடுக்கப்படாததால் மதுரை பிரமுகர் காவேரி மணியம், தி.மு க.விலிருந்து விலகினார்.

இதன் எதிரொலியாக ஐந்து தி.மு.க. தொண்டர்கள் அண்ணா சிலை முன் தீக்குளிக்க முயன்றபோது காவலர்களால் தடுக்கப்பட்டனர் என்பதாகும்.

ஆனால்-காவேரி மணியம் பின்னர் விலகலை விலக்கிக் கொண்டு தி.மு.க.வில் இணைந்தார். இப்பொழுது கழகப் பணி ஆற்றி வருகிறார்.

இந்த இரு சம்பவங்களில் 'தொண்டர்களின்' நிலை என்ன?

முதலாவது-நாளை 'தீ' வைத்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு சிறையில் தள்ளப்படுவர், இது உறுதி.

இரண்டாவது சம்பவத்தில் தொண்டர்கள் தன்னையே மாய்த்துக் கொள்ளவும் தயார் நிலையில் உள்ளனர், என்பதே!

ஆனால், உயிர்பறிக்கவும், உயிர் துறக்கவும் உள்ள கழகத் தொண்டர்களின் தியாகத்திற்கு உரியவர்களா, நம் தலைவர்கள்! கொள்கைகளை, இலட்சியங்களை மொத்த விலைக்கே விற்றுவிட்டவர்களே, தலைவர்கள்!

---

# தூக்குமரத்தை தூக்கிலிடுவோம்

**கவிஞர் கி. ஆறுமுகம்**
இராசபாளையம்

நந்தனை தீயிலிட்டு கடவுளாக்கியவர்கள்
நான்கு தமிழரை தூக்கிலிட புலிகளாக்குகிறார்கள்
அவர்கள் நான்கு தமிழரை தூக்கிலிடவில்லை
தமிழ்த் தேச விடுதலைக்கு விதை போடுகிறார்கள்

# மநு நீதி

**கவிஞர் புதுவை நெஞ்சன்**

போஸ்னியோவுக்கு ஒருநீதி
பாலஸ்தீனத்திற்கு ஒருநீதி
தமிழீழத்திற்கு அநீதியா...?
அராபத்துக்கு ஒருநீதி
மண்டேலாவுக்கு ஒருநீதி
பிரபாகரனுக்கு அநீதியா...?
'ஆம்'—மநுநீதி'



## அட்டைப்பட விளக்கம்

**நீதி கேட்கிறார்**

# நிர்மலா!

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதம் ஒகனேக்கல் அருகே அரசுப் பேருந்துகள் இரண்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. ஆந்திரத்தில் நக்சலைட்டுகள் கொல்லப்பட்டதற்காக தமிழ் நாட்டில் பேருந்து எரித்து எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் என்று காவலர்கள் தெரிவித்தனர். பின்னர் ரவீந்திரன் (வயது 38) எனும் இளைஞரை சுட்டுக் கொன்றதாக காவலர்கள் தெரிவித்தனர்.

அந்நிலையில் ஆந்திரப் பல்லைக்கழகத்தில் சட்டப் பேராசிரியராகப் பணியாற்றும் ரவீந்திரனின் துணைவியார் அளித்துள்ள பேட்டியில்:

ரவீந்திரன் தொலைத் தொடர்புத் துறையில் 1982-ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வந்தார். 97ம் ஆண்டில் பணியை விட்டு விருப்பு ஓய்வு பெற்றார்.

92ம் ஆண்டிலிருந்தே அவர் ஏழை, எளிய மக்களுக்காக பாடுபட்டு வந்தார். உழவர் உழைப்பாளர் மன்றம் என்ற அமைப்பின் கீழ் அவர் விவசாய கூலிகளுக்காக போராடி வந்தார்.

அவர் கடந்த ஏழாம் தேதி தர்மபுரி மாவட்டம் பெருங்காடு என்ற கிராமத்தில் ஒருவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது கைதுசெய்யப்பட்டார். அவருடன் சிவா என்பவரும் கைது செய்யப்பட்டார். 8 மற்றும் 9 தேதிகளில் அவரை காவலர்கள் சித்ரவதை செய்துள்ளனர். போலீஸ் லாக்-கப்பில் வைத்து கொன்று விட்டு, தப்பியோடும்போது சுட்டுக் கொன்றதாக பொய் கூறுகின்றனர்.

பேருந்து எரிப்புச் சம்பவத்திற்கும் அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அப்படியிருந்தால் ஏன் இரண்டு நாட்களாக நீதி மன்றத்தில் ரவீந்திரனைக் கொண்டுவர வில்லை?

இறுதிச் சடங்கின்போது ரவீந்திரனின் உடலில் பல காயங்கள் இருந்ததை காண முடிந்தது.

துப்பாக்கி குண்டு அவரது மார்பில் பாய்ந்து முதுகு வழியாக சென்றிருந்தது. தப்பியோடி இருந்தால், குண்டு எப்படி மார்பில் பாய்ந்து இருக்க முடியும்? முதுகு முழுவதும் தடியால் அடித்த காயங்கள் இருந்தன. முதுகில் ஒரு 'ஜாண்' அளவிற்கு கன்னி போயிருந்தது. அந்த அளவுக்கு என் கணவரை கொடுமைப்படுத்தியுள்ளனர்.

ரவீந்திரனை திட்டமிட்டு கொன்ற காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நாளிதழ்களில், ரவீந்திரன் திருமணத்திற்கு விளம்பரம் கொடுத்து இருந்தார். விதவை அல்லது விவாகரத்துபெற்ற பெண்ணை தான் மணக்க விருப்பதாக அறிவித்திருந்தார், நான் விவாகரத்து பெற்றவள். மூன்று வயது குழந்தையும் இருந்தது. குழந்தையையும், என்னையும் ஏற்றுக் கொண்டார் வேறொரு குழந்தை வேண்டாம் என்றும் முடிவு செய்தார். 1987-ம் ஆண்டு ஜூன் மாதம் எங்கள் திருமணம் நடந்தது.

ரவீந்திரன் அடிப்படையில் தொழிற்சங்கவாதி. பெண்கள், ஏழைகள் உரிமைக்காக பாடுபட்டவர். அவர் தீவிரவாதியோ நக்சலைட்டோ அல்ல.

நான், விசாகப்பட்டினத்தில் பெண்கள் தியாகத்திற்காகப் பாடுபட்டு வருகிறேன். என்னையும் இப்போது தீவிரவாதி என்ற முத்திரையைக் குத்தியுள்ளார், என்கிறார் நிர்மலா கலங்கிய கண்களுடன்.



அன்று கண்ணகி, கோவலனின் படுகொலைக்கு நீதி கேட்டார். அதைத் திப்பொறி வசனமாக்கி, திரைப்படமாக்கி பொருளையும், புகழையும் பதவியையும் சேர்த்துக் கொண்டவர் கலைஞர். கண்ணகிக்கும் ஒரு சிலை. கோட்டம்.

இன்று நிர்மலா நீதி கேட்கிறார்!

காவல் துறை அமைச்சரும் முதல்வருமான கலைஞர்-நீதி வழங்குவாரா?

## அதிகாரப் பதவியிலிருக்கும்
# முட்டாள்கள்

சில எண்ணங்களும் பொருளாதார நிலைமையும் சேர்ந்து புரட்சிகளை உண்டு பண்ணுகின்றன. அதிகாரப் பதவியிலிருக்கும் முட்டாள்கள், சில கிளர்ச்சிக்காரர்களே புரட்சிக்கு காரணமென்று குருட்டுத் தனமாகக் கருதுகிறார்கள். இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் யார்?

மக்களுடைய அதிருப்தியிலிருந்தும் ஆத்திரத்திலிருந்தும் தோன்றினவர்கள். ஆனால், இந்தக் கிளர்ச்சிக்காரர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு மட்டும் மக்கள் புரட்சிக்கு கிளம்பி விடுகிறார்களென்று சொல்ல முடியாது. மக்கள், எப்பொழுதுமே தங்கள் சொந்த நலனை விரும்பும் தன்மையுடையவர்கள். தாங்கள் வைத்திருப்பது சொற்பமாயிருந்தாலும் அதனை இழந்து விட ஒப்புக் கொள்ள மாட்டார்கள், ஆனால், நாளுக்கு நாள் துன்பம் அதிகரித்து வாழ்க்கையே ஒரு சுமையாகி விடுகிற பொழுது தான் ஆபத்தை ஏற்றுக் கொள்ளக் கிளம்பி விடுகிறார்கள்; கிளர்ச்சிக் காரர்களுடைய வார்த்தைகளைக் கேட்கிறார்கள்.

நூல்: ரூஸோவின் "சமுதாய ஒப்பந்தம்"

# புத்துயிர் தந்திடு!

கவிஞர் சி. வளர்மதி, வல்லம்

சித்திரப் பூவணிந்த
சீரினம் மார்கழியே!
நித்திரை கொள்வதற்கு—நீ
நேரம் அறிந்தாயே!

பட்டினிப் போர்வைக்குள்
படுத்துறங்கும் பாவிகளை;
தட்டியெழுப்பிச் சோற்றைக்
கொட்டிக் கொடுப்பாயோ!...தினம்

வட்டிக்கு வாங்கிக் கெட்டு
வகையற்றுக் கிடப்போரைக்
கட்டியணைத் தவர்தம்
கண்ணீரைத் துடைப்பாயோ!

ஏருழவன் வாழ்வதனில்
ஏற்றமெனும் விதியிலையே!
சோறுதரும் தோழருக்குச்
சோற்றுக்கே வழியிலையே!

சாதியப் பிரிவினையும்
சாத்திரமும் வேண்டுமோ தமிழ்த்
தேவியின் மக்கட்குள்ளே
தீண்டாமையும் தேவைதானோ?

தேற்றும் வகையறிந்த
சிந்தனைத் தையாளே—உன்னைப்
போற்றி முடிக்கின்றேன்
புத்துயிர் தந்திடு நீ!



தொலைபேசி : கடை : 2483019
வீடு : 2480145

# KPM மில்க் சென்டர்

எண் 1, பெரிய தெரு (மார்க்கெட்),
அனகாபுத்தூர், சென்னை-70.

அன்புடையீர்!

வணக்கம், எங்கள் நிறுவனத்தில் தரமான சுவையான பால், தயிர், வெண்ணெய், நெய், மோர், பாதாம் கீர், ரோஸ் மில்க், கூல் டிரிங்க்ஸ் போன்றவை அதிகாலை 4-00 மணி முதல் இரவு 10-30 மணி வரை உங்களுக்கு குறைந்த விலையில் தரம் குறையாது வழங்கிட நாங்கள் காத்திருக்கிறோம்.

நீங்கள் குடும்பத்துடன் வந்து வாங்கி மகிழ்ந்திட வேண்டுகிறோம்.

பால் மட்டும் தங்களின் இல்லங்களுக்கு நாங்களே நேரில் காலை, மாலை இரண்டு வேலைகளிலும் உங்கள் தேவைக்கேற்ப நேரில் வந்து வழங்கிட உங்கள் தேவையை பதிவு செய்து கொள்ளுங்கள்.

ஒருமுறை எங்கள் நிறுவன பாலை நீங்கள் பயன்படுத்திய பிறகு அதில் உங்களுக்கு முழு திருப்தி ஏற்பட்டால் மட்டுமே எங்களுக்கு ஆர்டர் அளிக்கவும். காரணம் மற்ற பால்களை விட தரமாகவும், திடமாகவும், சுவையாகவும் இருக்கும் என உறுதி கூறுகிறோம்.

திருமணம், சுபகாரியம் மற்றும் விசேஷங்களுக்கு மொத்தமாகவும் ஆர்டரின் பேரில் பால் சப்ளை செய்யப்படும்.

ம. பசுபதி
உரிமையாளர், KPM மில்க் சென்டர்

உயர்ந்த மாமனிதர்

# தங்க(மா)மணி

**தேவ. செல்லப்பா**

எண்பத்தாறு வயதாகிறது. இலண்டனின் பார்-அட்லா படித்து, மலேசியாவில் வக்கீல் தொழில் பார்த்து-1949ல் மதுரைப் பகுதியில் தொழிலாளர் போராட்டங்கள் நடத்தி விடுதலை பெற்ற இந்தியாவில் 1951-62ல் மதுரை எம்.பி. யாகவும் இருந்து இன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார், கே.டி.கே. தங்கமணி.

''ஒரு கொள்கைக்காக, தத்துவத்துக்காக நாம வாழணும்'' இது சின்ன வயசுலே இருந்து அழுத்தமாக என் மனசுல இருந்தது. அதற்கு தந்தை பெரியார்தான் காரணம் எங்க ஊருக்கு பக்கத்துலே சாத்தங்குடிங்கிற இடத்துக்கு ஒரு கல்யாணம் நடத்தி வைக்க பெரியார் வந்தாரு. 1929-வது வருடம்னு நினைக்கிறேன்.

கல்யாணப் பொண்ணு கதர் கட்டினாத்தான் கல்யாணம் செய்து வைப்பேன்'னு பெரியார் உறுதியாகச் சொல்லிட்டார். அதற்குப் பிறகு கதர் சீலை வாங்கி, கட்டிக் கல்யாணம் செய்து வெச்சாங்க. மாப்பிள்ளை தாலி கட்டி முடிச்சதும் பொண்ணுகிட்ட 'நீயும் மாப்பிள்ளைக்கு ஒரு தாலியைக் கட்டும்மா'னு சொல்லிக் கட்ட வெச்சாரு பெரியாரு! இந்த வயசுலயும் நான் கொள்கை உறுதியோடு இருக்கிறதுக்கு சின்ன வயசுல நான் பார்த்த இந்த மாதிரி சம்பவங்கள் தான் காரணம்''

ஆனந்த விகடன் (16-1-2000)



தோழர் தங்கமணி அவர்களின் மாமனார், 1940களில் மலேசியாவில் நான்கு பெரிய பணக்காரர்களில் ஒருவர். இன்றைய தினம் தன் துணைவியார் அடையாறு முதியோர் இல்லத்தில் சேர்ந்துள்ளார். எம்.பி., எம்.எல் ஏ. பதவி களுக்கான ஓய்வூதியம் மட்டும்தான் இவர் வருமானம். இதிலேயும் கட்சிக்கு ஒரு பகுதியைக் கொடுத்து விடுகிறார்.

உலகில் தலை சிறந்தது பணமல்ல, மனிதாபிமானம் தான் என்கிறார்.

கொள்கை, தத்துவம், எளிமை உள்ளவர்களை தமிழகம் வதிக்கப் போவது என்று?

---

# ஆங்கில வழி முதல்வர்

''கார்களின் எண் பலகை தமிழ், இரண்டிலும் இருக்க அரசாணை கொண்டு வந்தார்கள். அமைச்சர் தமிழ்க் குடிமகன் காரில் அவ்வாறு இருக்கிறது. முதல்வர் காரில் இன்னமும் ஆங்கில எண் பலகைதான் உள்ளது'' என்று முனைவர் இரா. இளவரசு அவர்கள் பேசினார்.

''தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்களின் ஆட்சியில் தான் தமிழ் தாழ்ந்து போனது. எல்.கே.ஜி. முதல் ஆங்கில வழிக்கல்வி ஏற்பட்டது'' என்றார் வழக்கறிஞர் ச. செந்தில் நாதன்.

தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாகத் தீர்ப்பு கிடைத்தால் மெட்ரிகுலேசன் பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக மாறுவதை இந்த அரசாணை கட்டுப்படுத்தாது. இதை தமிழக அரசு தடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டில் வலியுறுத்தப் பட்டது.

# நூல் நயம்

நூல்: அறிவுக்கடல் அப்துற்-றஹீம்
ஆசிரியர்: மெர்வின்
விலை: ரூ. 25/- பக்கங்கள்: 120
கிடைக்குமிடம்: குமரன் பதிப்பகம்,
2 முத்துக்கிருஷ்ணன் தெரு,
தி.நகர், சென்னை-600017.

பலவிருது நூல்களாகப் படைத்த ளித்தப்
பகட்டில்லாப் பேரெளியன் மேலோன் மெர்வின்
பலநூலார் "அறிவுக்கடல் அப்துற்-றஹீம்"
பற்றியதோர் வரலாற்று வாழ்க்கை நூலை
விலகாத நன்றிசொல்லி ஆசா னுக்கு!
விளங்குகின்ற வகையிலந்த வியாபா ரிக்கு
கலக்கமிலாக் காணிக்கை செலுத்தி நாளும்
காலத்தால் உயர்ந்துவிட்டார் குமுகா யத்தில்!
பண்புருவாய் சமயநெறி போற்றும் ஆற்றல்
பசுவினுடல் சுரக்கின்ற பாலி னைப்போல்
எண்ணற்ற மனவலிமை ஏற்றும் நூலாய்
எடுத்தடுத்து வழங்கிநல்லப் புகழைப் பெற்றார்!
கண்ணொத்த கருத்துகொள்கித் தொகுப்பைத் தந்து
கணந்தோறும் உழைத்துழைத்துச் செல்வம் சேர்த்து
விண்ணளவு பலர்உயர வழிகள் காட்டும்
வானுயர்த்தும் நூலிதனைப் படித்துப் பாரும்!

'ழ'கரப் பணிக் கவிஞர் கடலூரர் அ. தேவநாதன்

Edited, Published and owned by NA. VAI. Chokkalingam, Place of Publication: 15, Anandan Street, Pammal, Chennai-600075. printed, by S. Kalyanji at Champion power Printers, 3, Sathiya narayana Street, Chennai-33 Editor: NA. VAI. CHOKKALINGAM M.A.

221154

# பெரியார் விருது



சிறுகதை, நாடக ஆசிரியர், கவிஞர் பவாசமத்துவன் அவர்களுக்கு பெரியார் முத்தமிழ் மன்ற நான்காம் ஆண்டு விழாவில் (25-1-2000) சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் தி.க. பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி அவர்கள் "பெரியார் விருது" வழங்கி 'சமுதாய மகுடத்தில் பதிக்கப்பட்ட முத்து' எனச் சிறப்பித்தார்கள். வாழ்த்துக்கள்!

# தமிழ் ஓவியக் கலைஞர்



பாவலரேறு பெருஞ்சித்திரனார் பேரவையின் ஓவியக் கலைஞர் விமலாதித்தன் அவர்கள் தஞ்சையில் நடந்த தமிழகப் பெருவிழாவில் தமிழ் அறிஞர்கள், நூறு பேர்களின் உருவப் படங்களை அழகுற வரைந்து ஓவியக் கண்காட்சி நடத்தினார். மார்ச் 25, 26 நாட்களில் தில்லியில் நடைபெறவிருக்கும் மாநாட்டிலும் ஓவியக் கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளார்.

தமிழ் உணர்வு மிக்க இந்த இளைஞரை, ஓவியக் கலைஞரை பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்!

Yadhum Oore RNI No. 67947/97 WPP-264
Regd: No TN/CPMG-486/TBM-2000



20-ஆம் நூற்றாண்டின்

# இணையற்ற ஆசியன்!

"இலங்கை-தமிழர்களுக்கான சுதந்திர நாடொன்றை அமைப்பதற்காக கடந்த 16 ஆண்டு காலமாக பிரபாகரன் போராடி வருகிறார். இப்போரில் 50,000க்கு மேற்பட்டவர்கள் உயிர் துறந்துள்ளனர். அவருடைய விடுதலைப்புலிகள் இயக்கம் கட்டுப்பாடும், கடுமையும் நிறைந்த இயக்கமாகும்.

1980களில் எதிரியின் இந்தியப் படையை எதிர்த்து புலிகள் இயக்கம் வெற்றிகரமாகப் போராடியது." -உலகப் புகழ் பெற்ற அமெரிக்கப் பத்திரிகையான 'டைம்' இதழ் இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்குப் புகழாரம் சூட்டியதுடன், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆசியர்கள் நூறு பேர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுத்து மலர் வெளியிட்டுச் சிறப்பு செய்துள்ளது.

ஆசியக் கண்டத்தின் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களான சன்யாட்சென், மா.சே. துங். காந்தியடிகள், சுகர்ணோ, ஹோ சி-மின் போன்ற தலைவர்களின் வரிசையில் இளந்தலைவரான பிரபாகரனையும் தேர்ந்தெடுத்து இருப்பது தமிழினத்திற்கு என்றும் அழியாத பெருமையையும் புகழையும் அளித்துள்ளது.

நன்றி-'தென் செய்தி' இதழ்

கடந்த சனவரி 'யாதும் ஊரே'-எழுச்சி இதழ் '20-ம் நூற்றாண்டின் இணையற்ற மாவீரன்' என்று தம்பி பிரபாகரனைச் சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.